# ஈரானை அச்சுறுத்தும் வகையில் வளைகுடா நாடுகளின் இஸ்ரேலுடனான உறவுகள் அதிகரிப்பு : வேண்டத்தகாத பிரச்சினையை வேண்டி நிற்கும் எண்ணெய் ஷேக்மார்கள்

## லத்தீப் பாரூக்

அபுதாபியிலும் பஹ்ரேனிலும் உள்ள வளைகுடா ஷேக்மார்கள் இஸ்ரேல் ஜனாதிபதி ஐசாக் எர்ஸொக், பிரதம மந்திரி நப்டாலி பெனட் அகியோரை செங்கம்பளம் விரித்து வரவேற்றுள்ளனர். இஸ்லாத்தின் மூன்றாவது புனிதத்தலமான மஸ்ஜிதுல் அக்ஸாவை தரைமட்டமாக்க இஸ்ரேல் தொடர்ச்சியான நடவடிக்கைகளை எடுத்து வருகின்ற நிலையிலும் பலஸ்தீன மக்கள் மீது தொடர்ந்து கொடூரமான தாக்குதல்களை நடத்தி அன்றாடம் அவர்களைக் கொன்று வருகின்ற நிலையிலும் தான் இந்த செங்கம்பள வரவேற்பு வழங்கப்பட்டுள்ளது.

வளைகுடா ஷேக்மாரின் இஸ்ரேலுடனான இந்தப் புனிதமற்ற தேன்நிலவு அவர்களின் எஜமானர்களான அமெரிக்காவினதும் ஐரோப்பாவினதும் ஆதரவுடன் தான் வலுவடைந்து வருகின்றது. இந்தப் பிராந்தியத்தில் இவர்களுக்கு மிக அண்மையில் இருக்கின்ற தமது பரம எதிரியான ஈரானை அடிபணிய வைக்கும் ஒரு நப்பாசையில் தான் இஸ்ரேல் வளைகுடா உறவுகளுக்கு அமெரிக்க மற்றும் ஐரோப்பிய எகாதிபத்திய சக்திகள் தூபமிட்டு வருகின்றன. ஆனால் வளைகுடா முழுவதற்கும் இனி வரும் பல தலைமுறைகளுக்கு பாதகமான விளைவுகளை இந்த நிலை ஏற்படுத்தும் என்பதை புரிந்து கொள்ள வளைகுடா ஷேக்மார் தவறி உள்ளனர்.

பலஸ்தீனத்துக்குள் வன்முறைகள், குற்றச்செயல்கள், ஏமாற்றம், நயவஞ்சகம், பொய்கள், அச்சுறுத்தல்கள் என மனித விழுமியங்களுக்கு அப்பாற்பட்ட எல்லாவிதான காரியங்களையும் புரிந்து, இஸ்ரேல் என்ற சட்ட விரோத நாட்டை ஸ்தாபித்தப் பின், இஸ்ரேல் மத்தியதரைக் கடல் பிராந்தியம் முதல் ஈராக், சிரியா, எகிப்தின் ஒரு பகுதி உற்பட்ட பிரதேசம் வரை தனது அகண்ட இஸ்ரேல் ராஜ்ஜியத்தை உருவாக்கும் நடவடிக்கைகளில் தான் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றது என்பதை யாரும் மறந்து விடக் கூடாது.

இந்த சதித் திட்டத்தின் ஒரு அங்கமாக அமெரிக்கா, பிரிட்டன் பிரான்ஸ் ஆகிய நாடுகளுடன் இணைந்து ஈராக், லிபியா மற்றும் சிரியா ஆகிய மத்திய கிழக்கின் மூன்று எண்ணெய் வளம் மிக்க நாடுகளைத் இஸ்ரேல் துவம்சம் செய்துள்ளது. ஒட்டு மொத்த மத்திய கிழக்கும் இன்று கொலைகளம் ஆக்கப்பட்டுள்ளது.

ஈராக்கை அழிப்பதென்பது இன்று நேற்று உருவான திட்டமல்ல. அது யூதர்கள் கடந்த 2500 வருடங்களாக கண்டு வந்த கனவு. நபி இப்றாஹிமின் பிறப்பிடமான பாபிலோன் பிரதேசத்தில் இருந்து யூதர்கள் விரட்டி அடிக்கப்பட்டது முதல் அவர்களிடம் இருந்து வந்த பழி தீர்க்கும் உணர்வு. மத்திய கிழக்கின் ஏனைய

பகுதிகளில் இஸ்ரேல் கடந்த பல வருடங்களில் அமெரிக்காவுடனும் ஐரோப்பாவுடனும் இணைந்து தனக்கு எந்த வகையிலும் அச்சுறுத்தலாக அமையாத மதச்சார்பற்ற கொடுங்கோல் ஆட்சியாளர்களைப் பதவியில் அமர்த்தி வந்துள்ளது.

இந்தப் பிராந்தியத்தில் இஸ்ரேலுக்கு சவாலாக இருந்து வரும் ஒரேயொரு நாடு ஈரான் மட்டுமே. எனவே ஈரானையும் அழிக்க வேண்டிய தேவை இஸ்ரேலுக்கு நீண்டகாலமாக இருந்து வருகின்றது. அமெரிக்காவும் ஐரோப்பாவும் முன்வைக்கும் ஈரானுடனான எந்த ஒரு சமாதானத் திட்டத்தையும் இஸ்ரேல் முழுமையாக நிராகரிப்பதற்கும் அணு ஆயுதத் திட்டங்கள் குறித்து ஈரானுடன் பேச்சுவார்த்தை நடத்த மறுத்து வருவதற்கும் இதுவே காரணம்.

ஈரானின் அணு வளத்தையும் அதன் இராணுவ பலத்தையும் நிர்மூலமாக்குவது என்ற திடசங்கற்பத்தோடு இஸ்ரேல் செயலாற்றி வருகின்றது. ஆனால் அதை நிறைவேற்றுவதற்கு வளைகுடாவின் ஏனைய நாடுகளின் ஆதரவும் ஒத்துழைப்பும் இஸ்ரேலுக்கு அவசியமாகின்றது. அதனால் தான் ஈரானில் அண்டை நாடுகளில் தாம் வைத்ததே சட்டம் என ஆட்சி புரியும் வளைகுடா ஷேக்மார்களை இஸ்ரேல் வளைத்துப் போட்டு வருகின்றது.

இந்த விடயத்தில் தனக்கு தேவையான அழுத்தத்தை வளைகுடா ஷேக்மார் மீது பிரயோகிப்பதற்கு இஸ்ரேல் அமெரிக்காவை தாராளமாகப் பயன்படுத்திக் கொள்கின்றது. இந்த ஷேக்மார் தமது சொந்த நாடுகளில் கொள்ளையடித்த மக்கள் செல்வத்தில் பெரும்பகுதியை அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் தான் முதலீடுகளில் பதுக்கி வைத்துள்ளனர். இந்தப் பதுக்கல்கள் தான் இப்போது இஸ்ரேலுடனான உறவுகளுக்குப் பாலமாக அமைந்துள்ளது. வளைகுடாவின் பண்டைய ஆட்சித் தலைமுறை காணாமல் போயுள்ள நிலையில் அல்லது காலாவதியாகி உள்ள நிலையில் அரண்மனைகளிலும் மாளிகைகளிலும் சகல செல்வ வசதிகளோடும் வளர்த்தெடுக்கப்பட்ட இரண்டாவது தலைமுறை எந்தத் தயக்கமும் இன்றி இஸ்ரேலுடன் பகிரங்கமாகவே இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்தி வருகின்றது. இவர்களால் இஸ்லாமும், முஸ்லிம்களின் புனிதப் பிரதேசங்களில் ஒன்றான அல் அக்ஸாவும், அப்பாவி பலஸ்தீன மக்களும் கைவிடப்பட்டுள்ள நிலையில்; அன்றாடம் அங்கு இழைக்கப்பட்டு வரும் கொடுமைகளால் பலஸ்தீன மக்கள் அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இஸ்லாத்துக்கும் முஸ்லிம்களுக்கும் எதிராக மிகத் திறவலாகவும் பரவலாகவும் அவர்கள் கொடுமைகளை இழைத்து வருகின்றனர். எகிப்தின் ஆட்சிக் கவிழ்ப்பிலும் ஈராக்கில் புறியப்பட்ட யுத்தக் குற்றங்களிலும் அமெரிக்க ஐரோப்பிய தடயங்கள் மிகத் தெளிவான சான்றுகளாகப் பதிவாகி உள்ளன. தமது மக்களிடம் இருந்த வெளிப்படும் கொந்தளிப்பான எதிர்ப்புக்களை துச்சமென மதித்து இன்று இஸ்ரேலுடன் வெளிப்படையாக உறவாடி வரும் நாடுகள் வரிசையில் ஐக்கிய அரபு இராச்சியமும் பஹ்ரேனும் பிரதான இடம் வகிக்கின்றன. சவூதி அரேபியாவுக்கும் இஸ்ரேலுடன் மிக நீண்ட நாற்களாக உறவுகள் உள்ளன. ஆனால் அவை இரகசியமாக பேணப்பட்டு வருகின்றன.

அமெரிக்காவும் அதன் ஐரோப்பிய பங்காளிகளும் முஸ்லிம் நாடுகள் மீது மேற்கொண்ட ஆக்கிரமிப்புக்கள் சட்ட விரோத யுத்தங்கள் தாக்குதல்கள் என எல்லாவற்றிலும் சவூதி அரேபியாவின் பங்களிப்பு தாராளமாகக் காணப்படுகின்றது.

இவ்வாறான சூழ்நிலைகளின் பின்னணியில் தான்; இந்தியா, இஸ்ரேல் மற்றும் ஐக்கிய அரபு அமீரகத்தை உள்ளடக்கிய ஒரு முக்கோண கூட்டை உருவாக்க இஸ்ரேல் எத்தனிக்கின்றது.

2020 செப்டம்பர் 15ல் ஐக்கிய அரபு அமீரகம் இஸ்ரேலுடன் முறையான உறவுகளை ஸ்தாபித்துக் கொண்ட முதலாவது வளைகுடா நாடாகியது. 1979ல் எகிப்தும், 1994ல் ஜோர்தானும் முறையே உறவுகளை ஸ்தாபித்துக் கொண்டன. இஸ்ரேலுடன் உத்தியோகப்பூர்வ உறவு பூண்ட மூன்றாவது அரபு நாடு அமீரகமாகும்.

இஸ்ரேல் ஜனாதிபதி ஜசாக் எர்ஸொக் ஐக்கிய அரபு அமீரகத்துக்கான தனது முதலாவது விஜயத்தை கடந்த மாதம் மேற்கொண்டார். அமீரகத்தின் நடைமுறை ஆட்சியாளர் ஷேக் முஹம்மத் பின் செயித் அல் நஹ்யானுடன் அவர் பாதுகாப்பு தொடர்பான உறவுகள் பற்றி விரிவான பேச்சுக்களை நடத்தி உள்ளார்.

ஐக்கிய அரபு அமீரகத்தின் மீது கடந்த மாதத்தில் இரு தடவைகள் ஆளில்லா விமானங்கள் மூலம் ஏவுகணைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இவற்றை யெமனில் உள்ள ஹௌத்தி கிளர்ச்சியாளர்கள் நடத்தியதாக உரிமை கோரப்பட்டுள்ளது. இனிமேல் இவ்வாறான தாக்குதல்கள் எதுவும் நடக்காத வண்ணம் தேவையான பாதுகாப்பு மற்றும் புலனாய்வு ஒத்துழைப்புக்களை வழங்க இஸ்ரேல் தற்போது இணக்கம் தெரிவித்துள்ளது.

"உங்களது பாதுகாப்புத் தேவைகளை நாம் முழுமையாக ஆதரிக்கின்றோம். எமது பிராந்தியத்தில் அமைதியை நாடும் மக்களின் முழுமையான பாதுகாப்பை உறுதி செய்வதற்கான சகல வழிமுறைகளையும் கண்டறியவே நாம் இங்கு வந்துள்ளளோம்" என்று இஸ்ரேல் ஜனாதிபதி இந்தச் சந்திப்பின் போது தெரிவித்துள்ளார்.

"பிராந்திய ஸ்திரப்பாடு, அமைதி என்பன எதிர்நோக்கியுள்ள அச்சுறுத்தல்கள் பற்றி குறிப்பாக, ஆயுதக் குழுக்களையும் பயங்கரவாத சக்திகளையும் வைத்திருப்பவர்களால் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்கள் பற்றி நாமும் இஸ்ரேலும் பொதுவானதோர் நிலைப்பாட்டையே கொண்டுள்ளோம்" என்று அமீரக அதிபர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே ஈரானிடம் இருந்து அச்சுறுத்தல்கள் விடுக்கப்படுவதாகக் காரணம் காட்டி பஹ்ரேன் அரபிக் கடல் மற்றும் செங்கடல் ஆகிய பகுதிகளில் இஸ்ரேலின் நலன்களைப் பேணும் வகையில் இஸ்ரேலுடன் இயல்பான உறவுகளைத் தொடங்கியுள்ளது.

இஸ்ரேல் பிரதமர் நப்டாலி பெனட் இம்மாத முற்பகுதியில் பஹ்ரேனுக்கு விஜயம் செய்துள்ளார். ஈரான் பற்றிய பகிர்ந்து கொள்ளப்பட வேண்டிய கவலைகள் எனும் தொனிப் பொருளில் 2020ல் அமெரிக்க ஆதரவுடன் தொடங்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் ஒரு அங்கமாகவே இவ்விஜயம் இடம் பெற்றுள்ளது. இஸ்ரேல் பிரதமர் பஹ்ரேன் பிரதமர் சல்டான் பின் ஹாமித் அல் கலீபாவுடன் விரிவான பேச்சுக்களை நடத்தி உள்ளார்.

என்றாவது ஒரு நாள் இடம்பெறலாம் என்று எதிர்ப்பார்க்கப்படுவது போல் ஒருவேளை ஈரான் மீது ஒரு இராணுவத் தாக்குதல் இடம்பெற்றால் ஐக்கிய அரபு அமீரகத்தையும் பஹ்ரேனையும் இஸ்ரேல் தனது தாக்குதல் தளமாகப் பயன்படுத்தலாம். ஈராக், சிரியா மற்றும் லிபியாவில் ஏற்படுத்தியதைப் போன்ற அழிவுகளையும் நாசங்களையும் ஈரானிலும் விளைவிக்கலாம்.

ஆனால் அதன் பிறகு தனது நோக்கம் நிறைவேறிய பின் முடியுமான அளவு எண்ணெய் வளத்தை வளைகுடாவில் இருந்து சுரண்டிய பின் அமெரிக்காவும் அதன் பங்காளிகளும் இஸ்ரேலும் வளைகுடா நாடுகளை மொட்டை அடித்து விட்டு அங்கிருந்து வெளியேறலாம். அப்போது ஈரானை தனித்து நின்று சந்திக்கும் நிலைக்கு ஷேக்மார் தள்ளப்படலாம். ஈரானை ஆக்கிரமிக்க ஈராக் அதிபர் சதாம் ஹ{ஸேனை மேற்குலக நாடுகளுடன் சேர்ந்து தூண்டிவிட்டதில் சவூதி அரேபியா வழங்கிய மாபெரும் பங்களிப்பை ஈரான் ஒரு போதும் மறக்கத் தயாராக இல்லை. குறிப்பிட்ட அந்த ஈரான் ஈராக் யுத்தம எட்டு வருடங்கள் நீடித்து பத்து லட்சத்துக்கும் அதிகமான ஈரான் ஈராக் மக்களின் உயிர்களைக் காவு கொண்டது.

ஈரானுக்கும் வளைகுடா ஷேக்மாருக்கும் இடையிலான இந்தக் கசப்புணர்வும், வெறுப்புணர்வும், சந்தேகமும் இன்னும் தீர்ந்த பாடாய் இல்லை. இந்நிலையில் ஈரானுடன் நேசக்கரம் நீட்டுவதே வளைகுடா பிராந்தியத்தில் உண்மையான அமைதிக்கும் சமாதானத்துக்கும் வழிவகுக்குமே தவிர, ஈரானைக் கையாள இந்தப் பிராந்தியத்தில் இஸ்ரேலுக்கு செங்களம் விரிப்பது விவேகமானது அல்ல என்பதை ஷேக்மார் மறந்து விட்டனர். அமெரிக்காவினதும் அதன் நேச அணிகளதும் இஸ்ரேலினதும் உண்மையான அக்கறை பிராந்திய சமாதானத்திலோ அமைதியிலோ அல்ல மாறாக பிராந்தியத்தின் எண்ணெய் வளத்தில் தான் அவர்களின் பூரண அக்கறைத் தங்கி உள்ளது என்ற உண்மையையும், அதற்காகத் தான் உலகம் முழுவதும் முஸ்லிம் நாடுகள் இலக்கு வைத்து தாக்கப்படுகின்ற என்பதையும் ஷேக்மார் உணரத் தவறி உள்ளனர்.

இஸ்லாத்தையும் இஸ்லாமியப் புரட்சியையும் பார்த்து ஏன் முஸ்லிம்கள் என தங்களைக் கூறிக்கொள்ளும் அரபுலக ஆட்சியாளர்கள் அஞ்ச வேண்டும் என்தையும் புரிந்து கொள்ள முடியவில்லை. **(முற்றும்)**